வணக்கம்

ஆகாஷ்வாணி - புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : ரோஷ்னா காசிம்

நாள் 14.04.2024 ஞாயிற்றுக்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மக்களவை தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையை பாரதீய ஜனதா கட்சியின் மூத்த தலைவரும், பிரதமருமான திரு.நரேந்திர மோடி இன்று புதுடெல்லியில் வெளியிட்டுள்ளார்.
- சட்டமேதை, பாரத ரத்னா டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் 134ஆவது பிறந்த தினம் இன்று நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.
- தமிழ்ப் புத்தாண்டு, Vishu, Baisakhi உள்ளிட்ட பண்டிகைகளை முன்னிட்டு குடியரசு தலைவர், குடியரசு துணைத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.
- வரும் 19ஆம் தேதி நடைபெறவுள்ள முதல்கட்ட மக்களவை தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ள நிலையில் அரசியல் கட்சித்தலைவர்கள் தங்கள் வேட்பாளர்களுக்கு ஆதரவாக தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

<u>பிஜேபி தேர்தல் அறிக்கை 1 (18)</u>

மக்களவை தேர்தலை ஒட்டி பாரதீய ஜனதா கட்சி இன்று தேர்தல் அறிக்கையை வெளியிட்டுள்ளது. அறிக்கையை அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி இன்று வெளியிட்டார். புதுடெல்லியில் உள்ள அக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி பாரதீய ஜனதாகட்சியின் தேசியத் தலைவர் திரு ஜே.பி. நட்டா, மத்திய அமைச்சர்கள் திரு. அமித்ஷா, திரு. ராஜ்நாத்சிங், திருமதி நிர்மலா

சீதாராமன் உள்ளிட்டோர் தேர்தல் அறிக்கையை வெளியிட்டனர். நிகழ்ச்சியில் தொடர்ந்து உரையாற்றிய பிரதமர் திரு. நரேந்திரமோடி அம்பேத்கர் பிறந்த நாளில் தேர்தல் அறிக்கையை வெளியிடுவது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என தெரிவித்தார்.

-ஒரே நாடு ஒரே தேர்தல், ஒரே மாதிரியான குடிமைச் சட்டம், ஒரே வாக்காளர் பட்டியல் போன்றவை செயல்படுத்தப்படும் என்றும், நாடுமுழுவதும் உள்ள 70 வயதுக்கு மேற்பட்டவர்கள், 3ஆம் பாலினத்தவர்கள் அனைவரும் ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு 5 லட்சம் ரூபாய் வரை காப்பீடு வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இந்த தேர்தல் அறிக்கையில், விவசாயிகள், இளைஞர்கள், பெண்கள் ஆகியவர்களை மையமாகக் கொண்டு

<u>பிஜேபி தேர்தல் அறிக்கை 2 (7)</u>

உருவாக்கப் பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார். அடுத்த 5 ஆண்டுகளுக்கு கரீப் கல்யாண் அன்ன யோஜனா திட்டத்தின் கீழ் இலவச ரேஷன் வழங்கப்படும் என்றும், முத்ரா கடனுதவி திட்டத்திற்கான தொகை 20 லட்சமாக அதிகரிக்கப்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார். அனைத்து கிராமங்களுக்கும் குழாய்க் குடிநீர், ஒரு ரூபாய்க்கு சானிடரி நாப்கின்கள், புல்லட் ரயில் உருவாக்கம், திருவள்ளுவர் பெயரில் பண்பாட்டு மையம், சூரிய மின்சக்தி மூலம் மின்சக்தி வழங்கும் திட்டம் உள்ளிட்ட அம்சங்கள் இந்த தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ளன.

அம்பேத்கர் 1 (17)

சட்டமேதை, பாரத ரத்னா டாக்டர் பி.ஆர். அம்பேத்கரின் 134ஆவது பிறந்த தினம் இன்று நாடு முழுவதும் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இதனை ஒட்டி குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். நாடாளுமன்ற வளாகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அவரது திருவுருவப் படத்திற்கு, குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிடுள்ள வாழ்த்துச் செய்தியில் பாபா பி.ஆர். அம்பேத்கரின்கொள்கைகளை கடைபிடித்து நாட்டின் வளர்ச்சிக்காக அனைவரும் ஒருங்கிணைந்து பாடுபவேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

-கல்வியியல் நிபுணர், பொருளாதார நிபுணர், சமூக சீர்திருத்தவாதி, அரசியல்வாதி போன்ற பன்முகத் தன்மை கொண்ட தலைவராக டாக்டர் அம்பேத்கர் நாட்டிற்கு அளித்த பங்களிப்பு என்றும் நினைவுகூரத்தக்கது என குடியரசு தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

புதுச்சேரி அம்பேத்கர் (9)

புதுச்சேரியில் டாக்டர் பிஆர் அம்பேத்கரின் பிறந்த தினத்தை ஒட்டி சட்டப்பேரவை எதிரே உள்ள பாரதி பூங்காவில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு துணை நிலை ஆளுநர் திரு. ராதாகிருஷ்ணன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். புதுச்சேரி அரசு சார்பில் முதலமைச்சர் திரு. ரங்கசாமி, அம்பேத்கரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அவருடன் சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம், சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு.ராஜவேலு,

அமைச்சர் திரு. லட்சுமி நாராயணன் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

தமிழ்ப் புத்தாண்டு 1 (17)

தமிழ்ப் புத்தாண்டு, Vishu, Baisakhi உள்ளிட்ட பண்டிகைகளை முன்னிட்டு குடியரசு தலைவர், குடியரசு துணைத் தலைவர், பிரதமர் உள்ளிட்ட தலைவர்கள் மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர். சித்திரை முதல் நாளான இன்று தமிழ்ப் புத்தாண்டு தினம் கொண்டாடப்படுகிறது. இதே போன்ற கேரள மக்கள் இந்நாளில் விஷு பண்டிகையாகவும், வடமாநிலங்களில் இந்த நாள் Baisakhi பண்டிகையாகவும் கொண்டாடப்படுகிறது. இதனையொட்டி குடியரசு தலைவர் திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் கொண்டாடப்படும் இந்த விழாக்கள் நமது பன்முக கலாச்சார பாரம்பரியத்தின் துடிப்பான வெளிப்பாடுகள் என கூறியுள்ளார். ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் சகோதரத்துவத்தை இந்தப் பண்டிகைகள் மேம்படுத்துவதாக குறிப்பிட்டுள்ள அவர் சமூக நல்லிணக்கத்தின் அடையாளங்களாகத் திகழும் இந்தப் பண்டிகைகள் நமது வாழ்விற்குப் புதிய சக்தியையும், உற்சாகத்தையும் அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

-குடியரசு துணைத் தலைவர் திரு. ஜக்தீப் தன்கர் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், நாடு முழுவதும் தனித்துவமான பெயர்கள் மற்றும் பாரம்பரியத்துடன் கொண்டாடப்படும் இந்த திருவிழாக்கள் வளமான எதிர்காலத்திற்கான நம்பிக்கையை பிரதிபலிக்கிறது என்றும்

தமிழ்ப் புத்தாண்டு 2 (12)

குறிப்பிட்டுள்ளார். இந்த சிறப்பான தருணம் அனைவரின் வாழ்க்கையிலும் மகிழ்ச்சி, வெற்றி மற்றும் நிறைவைக் கொண்டுவரட்டும் என கூறியுள்ளார்.

-பிரதமர் திரு. நரேந்திர மோடி தமது சமூக வலைதளத்தில் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், அறுவடையுடன் நெருங்கிய தொடர்புடைய இந்த வலிமையான பண்டிகைகள், மக்களின் வாழ்வில் வளம் மற்றும் மகிழ்ச்சியை ஏற்படுத்தட்டும் என்று கூறியுள்ளார். மேலும் இந்தப் பண்டிகை நமது பாரம்பரியம் மற்றும் ஒற்றுமை உணர்வை வெளிப்படுத்துவதாகவும், தெரிவித்துள்ளார்.

-மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணை அமைச்சர் டாக்டர் எல்.முருகன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், சித்திரை மாதம் என்பது தமிழர்களின் வாழ்வில் முத்திரை பதிக்கும் மாதமாக காலங்காலமாக திகழ்ந்து வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

தேர்தல் ஏற்பாடுகள் 1 (17)

வரும் 19ஆம் தேதி நடைபெறவுள்ள முதல்கட்ட மக்களவை தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ள நிலையில் அரசியல் கட்சித்தலைவர்கள் தங்கள் வேட்பாளர்களுக்கு ஆதரவாக பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். முதல்கட்டமாக 17 மாநிலங்கள் மற்றும் 4 யூனியன் பிரதேசங்களிலுள்ள 102 மக்களவை தொகுதிகளுக்கும், சிக்கிமில் உள்ள 32 சடடமன்ற தொகுதிகளுக்கும், அருணாச்சல பிரதேசத்திலுள்ள 60 சட்டமன்ற தொகுதிகளுக்கும் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

-இதற்கான ஏற்பாடுகளை தேர்தல் ஆணையம் முழுவீச்சில் மேற்கொண்டு வருகிறது. வாக்குச்சாவடி சீட்டுகள் விநியோகம் செய்யும் பணி நிறைவடைந்துள்ளது. வாக்காளர்களுக்கு வாக்குச்சாவடியில் தேவையான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. இத்தகைய ஏற்பாடுகளை மாவட்ட தேர்தல் அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை கண்காணிக்க குழு அமைக்கப்பட்டு, கண்காணிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தேர்தல் ஏற்பாடுகள் 2 (16 )

-வாக்காளர்கள் 100 சதவிகிதம் வாக்களிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

-முதல்முறை வாக்காளர்களிடையே ஏற்படுத்தப்பட்டு வரும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

-புதுச்சேரியில் இந்திய தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்திலின்படி முறையான வாக்காளர் கல்வி, மற்றும் தேர்தலில் பங்கெடுத்தல் என்ற திட்டத்தின் கீழ் 100 சதவிகித வாக்குப்பதிவினை வலியுறுத்தி மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகம் சார்பில் புதுச்சேரி அரசு ஆயுஷ் மருத்துவத் துறையுடன் இணைந்து இன்று வெங்கட்டா நகர் பூங்காவில் நடைப்பயிற்சி செய்ய வருகை தரும் பொதுமக்களுக்கு யோகப்பயிற்சி செய்து காண்பிக்கப்பட்டு, வாக்காளர் விழிப்புணர்வு கருத்துக்கள் அடங்கிய துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியை மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகத்தின் வாக்காளர் விழிப்புணர்வு பிரிவு ஏற்பாடு செய்திருந்தது.

தேர்தல் ஏற்பாடுகள் 3 (13 )

-புதுச்சேரியில் வரும் 19ஆம் தேதி மக்களவை தேர்தல் வாக்குப்பதிவு நடைபெறவுள்ள நிலையில் சுதந்திரமான மற்றும வெளிப்படையான தேர்தல் நடத்திட மாவட்ட நிர்வாகம் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக தேர்தலின்போது வெடிபொருட்கள் மற்றும் வெடிமருந்துகளை தவறாகப் பயன்படுத்துவதை தடுப்பதற்காகவும் பொது அமைதி மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும், இந்திய வெடிபொருள் சட்டம் மற்றும் விதிகளின்படி புதுச்சேரி மாவட்டத்தில் பட்டாசு தயாரிப்பதற்கும், வைத்துக்கொள்வதற்கும் மற்றும் விற்பதற்கும் வழங்கப்பட்ட அனைத்து உரிமங்களும் 17.04.2024 முதல் 20.04.2024 வரையிலும், 02.06.2024 முதல் 05.06.2024 வரையிலும் தற்காலிகமாக ரத்து செய்யப்படுவதாக மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.குலோத்துங்கன் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

ராகுல் காந்தி (10)

மக்களவை தேர்தல் சித்தாந்தங்களுக்கும் ஜனநாயகத்திற்கும் இடையேயான போர் என காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான திரு. ராகுல்காந்தி குறிப்பிட்டுள்ளார், சத்தீஷ்கர் மாநிலத்தில் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் பங்கேற்றுப் பேசிய அவர், நடைபெறவுள்ள மக்களவை தேர்தல் 2 சித்தாந்தங்களுக்கு இடையிலான போர் என கூறியுள்ளர். அரசியல் சாசனத்தையும் ஜனநாயகத்தையும் பாதுகாப்பதற்காகவே காங்கிரஸ் மற்றும் இந்துக் கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். நாட்டில் வேலைவாய்ப்பின்மை அதிகரித்து வருவதாக கூறிய அவர், அனைத்து மாநிலங்களிலும் இது பெரும் பிரச்சனையாக உருவெடுத்துள்ளதாக கூறினார்.

காங்கிரஸ் கார்கே (10)

கடந்த 10 ஆண்டுகளாக மத்தியில் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும் பிஜேபி தற்போது பல்வேறு வாக்குறுதிகளை அளித்திருப்பது ஏன் என்று காங்கிரஸ் கட்சி தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே கேள்வி எழுப்பியுள்ளார். புதுடெல்லியில் இன்று செய்தி நிறுவனம் ஒன்றிற்கு அவர் அளித்த பேட்டியில், 10 ஆண்டுகளாக இந்த வாக்குறுதிகளை ஏன் நிறைவேற்றவில்லை என்றும் அவர் கேள்வி எழுப்பினார். பணவீக்கத்தை கட்டுப்படுத்தவும், புதிய வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் பிஜேபி தலைமையிலான அரசு தவறிவிட்டதாகவும் அவர் குற்றம் சாட்டினார். பிஜேபி தற்போது அளித்துள்ள வாக்குறுதிகளை மக்கள் நம்பமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி - வைத்திலிங்கம் (5)

புதுச்சேரி மக்களவை தொகுதியில் போட்டியிடும் காங்கிரஸ் வேட்பாளர் திரு.வி. வைத்திலிங்கம் கடந்த 2 நாட்களாக, காரைக்காலில் தேர்தல் பிரச்சாரம் செய்து வருகிறார். அவர் தனது உரையில், மத்திய பாஜக ஆட்சியில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தி தரவில்லை என்று குற்றம் சாட்டியுள்ளார்.

புதுச்சேரி - ரங்கசாமி (5)

புதுச்சேரி மக்கள வை தேர்தலில் பாஜக சார்பில் போட்டியிடும் பாஜக வேட்பாளர் திரு. நமசிவாயத்தை ஆதரித்து முதலமைச்சர் திரு. ரங்கசாமி நேற்று இரவு நெட்டப்பாக்கம் தொகுதியில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டார். கடந்த ஆட்சியில் ஆளுநருடன் சண்டை போட்டுக்கொண்டு, காங்கிரஸ் கட்சி மக்களுக்கு ஒன்றுமே செய்யவில்லை என்று அவர் குற்றம் சாட்டியுள்ளார்..